**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 246 /2017**

**Deposition of P.W.** 9

Name : திருமதி. அருள்றோஸ் சிங்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 30.07.2025**

Accused Present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னை பொருளாதார குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் நான் கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் 31.07.2011ம் தேதி பணியாற்றிய போது அன்றைய தினம் காலை 09.00 மணிக்கு முட்டைக்காடு, பாரதியார்சாலை, ஜெயக்குமார் மனைவி சுனிதா என்பவர் நிலையம் நேரில் ஆஜராகி கொடுத்தபுகார் மனுவை பெற்று புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப கொற்றிக்கோடு காவல்நிலைய குற்ற எண்.157/2011 பிரிவுகள் 147, 148, 364, 506(2) இ.த.ச ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2. அசல்முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

.2.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் நான் சொன்ன வகையில் புகார் மனுவை வாங்கினேன். புகார் மனு வாங்கும் போது ஜெயக்குமாரின் மனைவி உடன் இருந்தாரா என்றால் ஜெயக்குமாரின் மனைவி தான் புகாரை கொடுத்தார்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

7வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**3, 5வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

7வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**4, 6, 7வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

7வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**7வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் மனுவில் 5 நபர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிய போது அ.சா.2 ஜெயக்குமார் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தேன் என்றால் இல்லை, முட்டைக்காட்டில் வாடகைக்கு குடியிருந்தேன் என்றால் இல்லை. அ.சா.2 ன் வீட்டில் வாடகைக்கு குடியிருந்ததால் அ.சா.2 உடன் நட்பு ரீதியில் பழக்கம் என்றால் சரியல்ல. ஜெயக்குமார் அவரது மனைவி மூலம் கொடுத்த பொய்யான புகாரை பெற்று பொய்யாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. பொய்வழக்கு பதிவு செய்ததால் உடனடியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் புகார் மனு பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.